THE SUDAR OLI

# சுடர் ஒளி

Registered as Newspaper

06.06.2020 சனிக்கிழமை

## லொறி மீது மின்கம்பி விழுந்து இருவர் சாவு

கொழும்பு, ஜூன் 6
பாரவூர்தி ஒன்றின் மீது அதி உயரழுத்தம் கொண்ட மின் கம்பி அறுந்து வீழ்ந்ததில் மின்சாரம் தாக்கி இருவர் உயிரழந்துள்ளனர். இந்தச் சம்பவம் மாத்

2

## நீரில் மூழ்கி மூவர் சாவு

கொழும்பு, ஜூன் 6
பதுளை, பசறையில் நீரில் மூழ்கி ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட 3 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம் இன்று நடந்துள்ளது. பசறை, மடுல்சீமை, கரடியெல்ல பகுதி ஒன்றில்

2



## மழைக்கு சாத்தியம்

கொழும்பு, ஜூன் 6
நாட்டின் பல பகுதிகளில் அடுத்துவரும் சில தினங்களிலும் மழையுடனான வானிலைத் தன்மையில் அதிகரிப்பு ஏற்படக்கூடும் என காலநிலை அவ

2

## ஓகஸ்ட் முதலாம் திகதி சுற்றுலாத்துறை ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 6
கொரோனாத் தொற்றுக் காரணமாக இதுவரைகாலமும் முடக்கப்பட்டிருந்த நாட்டின் சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து ஆரம்பிக்கப்படும் என்று இலங்கை சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது. அதற்குரிய வரையறைகளும் வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: எதிர்வரும் ஓகஸ்ட்

2

## இரத்தக் கறை படிந்த கரங்கள் ஆட்சிக்கு வந்தால் பேராபத்து!

*மக்களை அணிதிரட்டி எதிர்ப்போம் என்று சஜித் பிரேமதாச அறைகூவல்*

கொழும்பு, ஜூன் 6
கைகளில் இரத்தக்கறை படிந்த குடும்பத்தினரை ஆட்சியில் நாம் தொடர்ந்து அமர்த்தினால் அது நாட்டுக்குத்தான் பேராபத்

2

# என்ன செய்வேன் என்று எவருக்குமே தெரியாது!

## அரசியல் அழுத்தங்களுக்கும் பணியேன்

### தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் மகிந்த தேசப்பிரிய 'கறார்'



கொழும்பு, ஜூன் 6
என்னை ஒருபோதும் அரசியல் அழுத்தங்களால் அடிபணியவைக்க முடியாது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

2

## புதினம் தெரியுமோ?

பூவோட சேர்ந்த நாரும் நறுமணம் வீசுறது போல, பன்றியோட சேர்ந்த பசுவும் சாக்கடைக்க போகு மெண்டு சொல்லுவினம். ஒருகாலத்தில தமிழ்த் தேசியத்தின் காவலன் மாதிரி உலா வந்த அந்தக் கூட்டமைப்பு முன்னாள் எம்.பி, எப்ப சட்டாம்பியாருக்கு வால் பிடிச்சு வாயைப் பொத்தினாரோ அப்பவே ஆளுக்கு கனபக்கத்தாலையும் எதிர்ப்புகள் வந்திட்டு. அந்த அரசியல்வாதிக்கு கிளிநொச்சியும், தீவகமும் தான் கோட்டை. எலெக்சன் கிட்டடியில வைக்கப்

2A

## ஊரடங்குச் சட்ட மீறல் 25,942 பேர் மீது வழக்கு

கொழும்பு, ஜூன் 6
கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கும் நோக்கில் தனிமைப்படுத்தல் மற்றும் தொற்று நீக்கம் சட்டத்துக்கு அமைய நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஊரடங்குச் சட்டத்துக்குப் புறம்பாகச்

2

## அமெ. இராஜதந்திரி வருகை பாடங்களைக் கற்றுத்தந்தது

*ஜனாதிபதியுடைய வெளிவிவகார உறவுகளுக்கான மேலதிக செயலர் தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 6
அமெரிக்காவின் மூத்த இராஜதந்திரியொருவர் இலங்கைக்குள் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாது அனுமதிக்கப்பட்டமை கற்றலுக்கான ஒரு தருணமாக அமைந்தது என்று ஜனாதி

2A

## சேலை அழகு என்பதற்காக அழகு ராணி ஆக முடியாது



### தனது கட்சியினருக்கு ரணில் அறிவுரை

கொழும்பு, ஜூன் 6
சேலை அழகு என்பதற்காக அழகு ராணி போட்டியில் வெல்ல விட முடியாது. தேர்தல் தொடர்பாக கூடிய அவதானம் செலுத்திச்

2A

## இரணைமடுவிலிருந்து 70 பேர் வெளியேறினர்

கிளிநொச்சி, ஜூன் 6
கிளிநொச்சி இரணைமடு விமானப்படை முகாமிலிருந்து தனிமைப்படுத்தலை நிறைவுசெய்த 70 கடற்படையினர் இன்று சனிக்கிழமை வெளியேறினர். வெலிசர கடற்படை முகாமில் இருந்து, கொரோனா வைரஸ் தொற்றுச் சந்தேகத்தில் தனிமைப்படுத்தலுக்காக இரணைமடுவுக்கு கடற்படையினர் 167 பேர் அழைத்து வரப்பட்டனர். தனிமைப்படுத்தலுக்காக அழைத்து

2






## பொன்.சிவகுமாரனுக்கு இன்று நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 6
போராட்டத்தின் முதல் வித்து பொன் சிவகுமாரனின் 46ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று பரவலாக அனுஷ்டிக்கப்பட்டது. உரும்பிராய் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவச்சிலை அமைந்துள்ள நினை

2

## லொறி மீது மின்கம்பி...

தளை, மகாவில பகுதியில் இன்று சனிக்கிழமை இடம்பெற்றது. மரம் ஒன்றின் கிளை முறிந்து அதி உயர் அழுத்த மின் கம்பி மீது விழுந்ததில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. உயிரிழந்தவர்கள் 23 மற்றும் 27 வயதுடையவர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

## நீரில் மூழ்கி...

நீர் நிரம்பிய குழி ஒன்றில் நீராடியபோதே இந்த அனர்த்தம் நடந்துள்ளது. 38 வயதுடைய தந்தை, 12 வயதுடைய மகள் மற்றும் 13 வயதுடைய சிறுமி ஆகியோரே உயிரிழந்துள்ளனர். இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# என்ன செய்வேன்.....

"எந்த காலப்பகுதியிலும் எனக்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை. அழுத்தங்களை பிரயோகித்தாலும் அதற்கு அடிபணிபவன் நான் அல்லன் என்பதும் அனைவருக்கும் தெரியும். நான் என்ன செய்வேன் என்பது எவருக்கும் தெரியாது. அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் என்னிடம் இது பற்றி கேள்வி எழுப்பியுள்ளனர். அனைவரிடமும் நான் ஒரே மாதிரியாகவே பழகுவேன்" என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் குறிப்பிட்டார்.

சிங்கள வாரஇதழொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், இந்த காலப்பகுதியில் தங்களுக்கு அரசியல் ரீதியில் ஏதேனும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டனவா? என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு கூறினார். தேர்தல் ஆணைக்குழு எந்தவொரு இரகசிய சந்திப்புகளையும் நடத்தவில்லை எனவும், ஆணைக்குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடும் உரிமை தனக்கு இல்லையா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். தேர்தல் ஆணைக்குழுவுக்குள் உள்ளக பிரச்சினைகள் இருக்கின்றனவா என எழுப்பட்ட கேள்விக்கு, அவ்வாறு பிரச்சினைகள் எதுவும் இல்லை. மாறுபட்ட கருத்துகள் உள்ளன என்று பதிலளித்தார் மஹிந்த தேசப்பிரிய.

"பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் சர்ச்சைக்குரிய கருத்துகளை வெளியிட்டாலும் அவரை பாதுகாக்கும் வகையிலேயே செயற்படுகின்றீர்கள். நீங்கள் அவருக்குப் பயமா?" என எழுப்பட்ட வினாவுக்கு, "இது விசித்திரமான கேள்வி. நான் ஏன் அவருக்கு பயப்படவேண்டும்? ஆணைக்குழுவின் தவிசாளர் என்ற வகையில் எவ்வேளையிலும் எனது அதிகாரிகளுக்காக நான் முன்னிலையாவேன் என்றார். (எ-44)

## இரத்தக் கறை படிந்த...

தாக மாறும் என்பதை மக்கள் அனைவரும் கருத்தில்கொள்ள வேண்டும். இலங்கையில் அதிகாரத்தைத் தக்கவைப்பதற்காக சிவில் நிர்வாக நடவடிக்கைகளில் இராணுவத்தைக் களமிறக்கி மக்களை அச்சுறுத்தி , வருத்தி, துன்புறுத்தி நேர்மையில்லாத முறை தவறிய கொடுங்கோன்மை ஆட்சியை தம்பியும் அண்ணனுமான ராஜபக்சக்கள் நடத்துகின்றனர். இதற்கு எதிராக நாட்டு மக்களை அணிதிரட்டப்போகின்றோம்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த ஆட்சி கொடுங்கோன்மை ஆட்சி மக்களை அடிமைப்படுத்தித் துன்புறுத்தும் ஆட்சி என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது. இதை அறிந்தும் நேரில் பார்த்தும் நாம் அமைதியாக இருக்கவே முடியாது. நாட்டின் தற்போதைய எதிர்க்கட்சிகளின் பிரதான பங்கு எமக்கே உரியது. இந்தநிலையில், இந்த ஆட்சியை எம்மால் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது. நாட்டு மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடம் உள்ளது.

பொதுத்தேர்தலும் நடைபெறவுள்ள நிலையில் அடுத்தகட்ட நடவடிக்கைகளை நாம் எடுக்க வேண்டும். மக்கள் அனைவரையும் அணிதிரட்டி இந்த அரசைத் தோற்கடிக்கும் வேலைத்திட்டங்களை நாம் ஆரம்பிக்க வேண்டும். அதற்குரிய கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன - என்றார். (எ-22)

## ஓகஸ்ட் முதலாம்....

மாதம் முதலாம் திகதியிலிருந்து உரிய முற்பாதுகாப்பு நடைமுறைகளுடன் நாட்டுக்குள் சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்கு இலங்கை சுற்றுலாத்துறை தயாராக இருக்கிறது. இதன்போது அனைத்து நாடுகளைச் சேர்ந்தவர்களும் அனுமதிக்கப்படுவார்கள் என்பதுடன் அவர்கள் குழுக்களாகவோ, குடும்பமாகவோ அல்லது தனியாகவோ வர முடியும்.

சுற்றுலாப்பயணிகளின் வருகைக்காக ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கொழும்பு இரத்மலானை விமானநிலையம் மற்றும் மத்தள ராஜபக்ச விமானநிலையம் என்பவை தொழிற்படும்.

சுற்றுலாப்பயணிகள் அனைவரிடத்திலும் செல்லுபடியாகும் விசா அனுமதிப்பத்திரம் இருப்பது கட்டாயமாகும். பயணிகளுக்கான விசா 30 நாள்கள் செல்லுபடிக் காலத்துக்கு விநியோகிக்கப்படும் என்பதுடன், அவர்களது வருகையின் பின்னர் 6 மாதகாலத்திற்கு அதனை நீடித்துக்கொள்ளவும் முடியும். நீண்டகாலம் இலங்கையில் தங்கியிருக்க விரும்பும் பயணிகளுக்கான விசா அனுமதி தொடர்பில் தற்போது ஆராயப்பட்டு வருகிறது. விசாவைப் பெற்றுக்கொள்வதற்கான கட்டணம் 100 அமெரிக்க டொலராகும்.

விசாவைப் பெற்றுக்கொள்வதற்கான அனுமதிப் பத்திரத்துடன் இலங்கையில் தங்கியிருப்பதற்கு முன்பதிவு செய்யப்பட்டமைக்கான விவரங்கள் (சுற்றுலா விடுதி, சிறிய ஹோட்டல்கள் போன்றவை), இலங்கையில் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டிருக்கும் இடங்களின் விவரங்கள், மீண்டும் சொந்த நாட்டுக்குத் திரும்புவதற்கான டிக்கெட், மருத்துவக் காப்புறுதி அத்தாட்சி ஆகியவையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இலங்கைவரும் சுற்றுலாப்பயணிகள் குறைந்தபட்சம் 5 இரவுகளேனும் நாட்டில் தங்கியிருப்பது அவசியமாகும்.

பயணிகள் தமது சொந்த நாட்டிலிருந்து கிளம்புவதற்கு முன்னதாக கொவிட் 19 தொற்றைக் கண்டறிவதற்கான பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டு தொற்று இல்லை என்பதை உறுதிப்படுத்தியிருத்தல் அவசியமாகும். விமானநிலையத்தின் புறப்படுகை நேரத்திற்கு 72 மணித்தியாலங்களை விடவும் முன்னதாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அறிக்கையாக அது இருக்கக்கூடாது.

இலங்கையில் வந்திறங்கும் பயணிகளுக்கு கொவிட் 19 வைரஸ் அறிகுறிகள் காணப்படாதவிடத்து, அவர்கள் தனிமைப்படுத்தப்பட மாட்டார்கள். நாட்டிற்குவரும் சுற்றுலாப்பயணிகள் அனைவருக்கும் விமானநிலையத்தில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்பதுடன், அதற்கு எவ்வித கட்டணங்களும் அறவிடப்பட மாட்டாது. என்றுள்ளது. (எ)

## மழைக்கு....

தான நிலையம் தெரிவித்துள்ளது. மத்திய, சப்ரகமுவ, மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடும். இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் தற்காலிகமாக காற்று சற்று அதிகரித்த வேகத்தில் வீசக்கூடும். இடி, மின்னல் தாக்கங்களில் ஏற்படக்கூடிய பாதிப்பை தவிர்ப்பதற்கு பொதுமக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என காலநிலை அவதான நிலையம் அறிவுறுத்தியுள்ளது. (எ)

## ஊரடங்குச் சட்ட...

செயற்பட்ட குற்றச்சாட்டில் இதுவரை 25 ஆயிரத்து 942 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அவர்களில் 10 ஆயிரத்து 892 பேருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மாதம் 20ஆம் திகதி மாலை 6 மணி முதல் நாடளாவிய ரீதியில் ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுத்தப்பட்டது. கடந்த மே மாதம் 11ஆம் திகதி முதல் ஊரடங்கு தளர்த்தப்பட்டு குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த காலத்தில் அதை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் பிற்பகல் 12 மணிவரை 230 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 96 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஊரடங்குச் சட்டத்தை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் இதுவரை மொத்தமாக 70 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அவர்களிடம் இருந்து 19 ஆயிரத்து 952 வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ)

## பொன்.சிவகுமாரனுக்கு...

விடத்தில் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

உரும்பிராயில் அமைந்துள்ள நினைவிடத்தில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சியினர் அஞ்சலி செலுத்தினர். உரும்பிராய் வேப்பம்பிராய் வீதியில் அமைந்துள்ள மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் காலை 9 மணிக்கு அஞ்சலி செலுத்தினர்.

உரும்பிராய் பொதுச்சந்தையில் அமைந்துள்ள சிவகுமாரனின் திருவுருவச் சிலை அமைந்துள்ள இடத்தில் காலை 9.30 மணிக்கு வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

அஞ்சலி நிகழ்வில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர். (க)

## இரணைமடுவிலிருந்து...

வரப்பட்ட கடற்படையினருக்கு பி.சி.ஆர் பரிசோதனையில் நோய்த் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்ட பின்னர் 70 பேர் தனிமைப்படுத்தல் நிறைவு செய்து வெளியேறினர்.

ஏனைய 97 கடற்படையினரின் மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், அவர்களுக்கான பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றதும் அவர்களும் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வெளியேறவுள்ளனர் என்று இரணைமடு விமானப்படை கட்டளை அதிகாரி குறூப் கப்டன் றொகான் பத்திரண தெரிவித்துள்ளார். (க-214,113)

# சேலை அழகு என்பதற்காக...

செயற்படவேண்டும். தள்ளுபடி செய்யப் பட்ட மனுக்கள் ஐக்கிய தேசியக் கட்சி தாக்கல் செய்தவையாகவே மக்கள் கருதுகின்றனர். மக்கள் மத்தியில் உண்மை நிலையைக் கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித் துள்ளார்.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கொள்ளுப்பிட்டிய இல்லத்தில் இடம்பெற்ற கட்சி உறுப்பி னர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு காலாவதியாகியுள்ளது. அரசியல மைப்பை மீறாது பாதுகாக்க வேண்டுமா யின், நாடாளுமன்ற அமர்வை ஒகஸ்ட் வரை ஒத்திவைத்துத் தேர்தலுக்கு செல்ல வேண்டும். எவ்வாறாயினும் நாடாளு மன்றம் மீண்டும் கூடும் திகதியை ஜனாதி பதி அறிவித்தேயாக வேண்டும்.

ஐ.தே.க. மாத்திரமல்ல தேர்தலை ஒத்தி வைக்குமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் மக்கள் விடுதலை முன்னணி என்பன கூட நீதிமன்றம் செல்லவில்லை. ஏனெனில் அரசியல் கட்சி என்ற வகை யில் எம்மால் தேர்தலை ஒத்திவைக்கு மாறு நீதிமன்றம் செல்ல இயலாது. மாறாக தேர்தல் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கே உள்ளது. அதை அவர்கள் செய்துள்ளனர்.

ஆனால் அரசமைப்பு ரீதியான வியாக்கியானத்தையே நீதிமன்றம் ஊடா கப் பெற்றுக்கொள்ள நாம் முற்பட்டோம். அங்கு எமக்கு சட்ட ரீதியானதொரு கருத்து காணப்பட்டது. பொதுத்தேர்தலுக்கான அறிவிப்பை ஜனாதிபதி அறிவித்ததன் பின்னர் மூன்று மாதத்துக்குள் தேர்தல் இடம்பெறாவிடின், அன்றிலிருந்து ஜனாதிபதியின் அறிவித்தல் செல்லுப்படி யாகுமா? இல்லையா? என்பதையே நாம் அறிய விரும்பினோம்.

ஆனால் நீதிமன்றத்தை நாடியவர்கள் இவ்வாறானதொரு விடயம் குறித்து கவ னத்தில் கொண்டிருக்கவில்லை. வெறும் அரசியல் நோக்கமே இங்கு காணப்பட் டது. எனவே தான் நாம் நீதிமன்ற விடயத் தில் பின்வாங்கியி ருந்தோம். எவ்வாறாயி னும் ஜனாதிபதியின் வர்த்தமானி அறிவிப்பு காலாவதியாகியுள்ளது.

தேர்தல் குறித்து ஆணைக்குழுவே தீர்மா னிக்க வேண்டும். அரசமைப்பை மீறாது பாதுகாக்க வேண்டுமாயின் நாடாளுமன் றத் தேர்தலுக்கான மற்றுமொரு அறிவித் தலை ஜனாதிபதி விடுக்கவேண்டும். நாடாளுமன்ற அமர்வை ஒகஸ்ட் வரை ஒத்தி வைத்து தேர்தலுக்குசெல்ல வேண் டும். அவ்வாறில்லையெனில் அரசமைப்பு ரீதியில் நெருக்கடியான விடயமாகி விடும். எவ்வாறாயினும் நாடாளுமன்றம் மீண்டும் கூடும் திகதியை ஜனாதிபதி அறிவித்தே ஆக வேண்டும். என்றார்.(எ)

# அமெ. இராஜதந்திரி....

பதியின் வெளிவிவகார உறவு களுக்கான மேலதிக செய லாளர் அட்மிரல் ஜய நாத் கொலம்பகே தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது இந்தச் சம்பவத்தால் இலங் கைக்கு விஜயம் மேற்கொள் ளும் இராஜதந்திரிகள் பின்பற்றவேண்டிய புதிய நடைமுறைகள் தொடர் பான அறிவிப்பு வெளியா னது.

விமான நிலையத்தில் பி.சி. ஆர். பரிசோதனைகள் கட்டாயமாக்கப்படுவதற்கு முன்னரே அந்த இராஜதந்தி ரிக்கு இலங்கைக்கு வருவ தற்கான அனுமதி வழங்கப் பட்டுவிட்டது. தாங்கள் இராஜதந்திரிக்கான அனும தியை வழங்கியவேளை, விமான நிலையத்தில் பரிசோதனைகள் கட்டாய மாக்கப்பட்டிருக்கவில்லை.

இராஜதந்திரிக்கு அவர் தூதரகத்தின் மேற்பார்வை யில் தனிமைப்படுத்தலை மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படு வார் எனவும் தெரிவித்தி ருந்தோம். ஆனால் அவர் எங்கு சோதனைக்கு உட்படு வார் எனத் தெரிவிக்கப்ப டவில்லை.

ஜூன் முதலாம் திகதி சோத னைகள் விமான நிலை யத்தில் கட்டாயமாக்கப் பட்டன. ஆயினும் இராஜ தந்திரிக்கு இது தெரியாது. அதனால் விமானநிலைய அதிகாரிகள் குழப்ப நிலையை எதிர்கொண்ட னர். அதனாலேயே அவர் செல்வதற்கு அனுமதித் தோம். இதன் மூலம் நாங் கள் பாடங்களை கற்றுக் கொண்டு புதிய அறிவுறுத் தல்களை விடுத்துள்ளோம். என்றார். (எ)

# புயலால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் இழப்பீடு

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை

மன்னார், ஜூன் 6



காற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள், தோட்டச் செய்கையாளர்கள் அனை வருக்கும் இழப்பீடு வழங்க மாவட் டங்களுக்குப் பொறுப்பான மாவட் டச் செயலர்கள் துரித நடவ டிக்கைகளை முன்னெடுக்க வேண் டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று சனிக்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

வடக்கில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் புயல் தாக்கத்தால் பலத்த பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. கடந்த 21 ஆம் திகதியிலிருந்து காற்று அதிகரித்துக் காணப்பட்டது. புயல் அபாயத்தைத் தொடர்ந்து வீசிய காற்றால் நாட்டில் பல்வேறு பகுதிகளிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்த நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீட்டை வழங்க யாழ்ப்பாண மாவட்டச் செயலர் துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் பாதிப்புக்கள் ஏற்பட் டுள்ள போதும் பாதிப்படைந்தவர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என பாதிக்கப் பட்டவர்கள் எனது கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர். மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்க ளில் வீடுகள் மற்றும் தோட்டச் செய்கைகள் பாதிப்படைந் துள்ளன. ஏனவே வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஏனைய தொழில் பாதிப்படைந்தவர்களுக்கு உதவிகளை மேற்கொள்ள துரித நடவ டிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்-என்றுள்ளது. (ப-56)

# புதினம் தெரியுமோ?

போறதெண்டால ,ஆள் தீவகப் பக்கம் ஒருக்கா 'விசிட்' அடிச்சி ருக்கிறார். முக்கியமாக சட்டாம் பிக்கு ஏன் வால் பிடிக்கிறன் எண் டதை விளக்கி, கட்சிக்காரரை தன்ரபக்கம் கொண்டுவர ஒரு சின்னக் கூட்டத்துக்கும் அழைப்பு விட்டிருக்கிறார். குறைஞ்சது 30 பேருக்கு இப்பிடி அழைப்பு போயி ருக்கு.

இந்த விசயம் தெரிஞ்சதும் தமிழ்த் தேசியத்தில விசுவாசமான தமிழரசுக் கட்சிக்காரர் கொஞ்சப் பேர் , அந்த அரசியல்வாதிக்கு எதிர்ப்புக்காட்ட வெளிக்கிட்டிருக் கினம். ஆள் வரேக்க செருப்பு மாலை போடுற ஆயத்தத்தோட 30 பேருக்கு கிட்ட, கூட்டம் நடக்கப்போறதாச் சொன்ன வீட்டுக்கு முன்னால வந்திட்டினம். இது அந்த அரசியல்வாதிக்கும் போனில சொல்லப்பட்டதால, அங்க ஏற்பாடு செய்த மத்தியானச் சாப்பாட்டுக்கும் ஆள் வரேலை. பிறகு எதிர்ப்புக்காட்ட நிண்ட ஆக்கள் ஒரு 3 மணி போல அங்க இருந்து போனதும், அரக்கப் பரக்க வந்த அரசியல்வாதி கூட் டத்தை தொடங்கேக்க ,அதில இருந்த ஆக்கள் வெறும் 7 பேர் தானாம். அதிலயும் 4 பேர் அவ ரோட வாகனத்தில வந்தவை. எப்பிடி இருந்த மனுசன், இப்பிடி யாகிட்டுதே? எண்டு அவின்ர முன்னாள் அனுதாபிகள் சொல லுற அளவுக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கு. ஆள் இனியாவது முழிச்சு, சரியான பாதையில போகாட்டி, அடுத்தடுத்த தேர்தல் களில மண்கவ்விற நிலை வந்தா லும் ஆச்சரியமில்லை.

# தேர்தல் ஆட்டத்துக்கு சஜித் அணி தயார்!

## தேர்தல் விஞ்ஞாபனமும் தயாரித்தது

கொழும்பு, ஜூன் 6

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கான விசேட மாநாடொன்று எதிர்வரும் 10 ஆம் திகதி பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெ றவுள்ளது.

பொதுத்தேர்தல் திகதியை சவாலுக்குட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட மனுக்கள் மீதான பரிசீலனைகள் நிறைவுபெற்று, அவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் தள்ளு படி செய்யப்பட்டன. இதனையடுத்து தேர்தலை நடத்துவதற்கான தீவிர நடவடிக்கையில் தேர்தல் ஆணைக்குழு இறங்கியுள்ளது. ஒகஸ்ட் இறுதிக்குள் தேர்தல் நடத்தப்படும் என நம்பப்படும் நிலையில் அதற்கான திகதி நாளைமறுதினம் திங்கட்கிழமை நிர்ணயிக்கப்படவுள்ளது. இந்தப் பின்புலத்திலேயே தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளவேண்டும், எத்தகைய உபாயங்களைக் கையாளவேண்டும் என்பன உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளன.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுத்தேர் தலுக்கான விஞ்ஞாபனமும் இறுதிசெய்யப்பட்டுள் ளது. பரப்புரை ஆரம்பிக்கப்பட்டதும் பிரதான நிகழ்வொன்றில் அது மக்கள் மயப்படுத்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார். (ப-44)

## சுற்றுச் சூழல் தினத்தில்

# உலக சுகாதார நிறுவனம் வெளியிட்ட 6 விடயங்கள்

கொடிகாமம், ஜூன் 6

கொவிட்19 தொற்றிலிருந்து பசுமைச் சூழலுக்கேற்ற விதத்திலும், ஆரோக்கி யமாகவும் மீள்வதற்கான ஆறு எளிய படிகளை உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

நமது ஆரோக்கியம் சார்ந்துள்ள காற்று, நீர் மற்றும் உணவின் மூலமாக இயற்கையை பாதுகாப்போம், வீடுகள் மற்றும் சுகாதார நிலையங்களுக்கு நீர் சுகாதார வசதிகள் சுத்தமான உறுதி யான சக்தி மற்றும் காலநிலை மாற்றத் துக்கு ஈடு கொடுக்கும் தன்மை கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்வோம். வளி மாசடைவதை குறைக்கக்கூடிய சக்தி வளங்களுக்கு மாறுவோம். அப்பொழுது கொவிட் 19 ஐ வென்றதும் மக்களுக்கு தூய காற்றை சுவாசிக்க முடியும், நிலை யான ஆரோக்கியமான உணவு முறைகளை மக்களிடையே ஊக்கு வித்து அவர்களுக்குத் தேவையான ஆரோக்கியமான மலிவான உணவுக ளைப் பெற உதவுவோம். நிலையான போக்குவரத்து முதற்கொண்டு ஆரோக்கி யமான வீடுகள் வரை சுகாதார முறைப்படி திட்டமிடப்பட்ட நக ரங்களை உருவாக்குவோம். சூழலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய காலநிலை மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய விடயங்களுக்கு மானியங்களை வழங்குவதைத் தவிர்ப்போம் என்ற 6 விடயங்களையே சுகாதார நிறுவ னம் அறிவுறுத்தியுள்ளது . (ப-159)

# தாரிக் மீதான தாக்குதல் மிலேச்சத்தனமானது!

## முன்னாள் அமைச்சர் அலி ஸாஹிர் கண்டனம்

கொழும்பு, ஜூன் 6

சிறப்புத் தேவையுடைய சிறுவன் தாரிக் அஹமட் மீதான பொலிஸாரின் மிலேச்சத்தனமான தாக்குதல் அதிர்ச்சியளிக்கிறது. இவ்வாறானவர்களுக்கு நடக்கக்கூடிய அநீதிகளுக்கு எதிராக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு நீதி கிடைக்க முயற்சி செய்யவேண்டும் என முன்னாள் அமைச்சர் அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

இது தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

அளுத்கம, தர்கா நகர் பகுதியைச் சேர்ந்த 14 வயதான சிறப்புத் தேவையுடைய சிறுவன் தாரிக் அஹமட் கடந்த மாதம் 25ஆம் திகதி வீட்டைவிட்டு வெளியேறி வீதிக்கு வந்த வேளை பொலிஸாரினால் மிகவும் கொடூரமாகத் தாக்கப்பட்டார். இதனை சம்பவ இடத்திலிருந்து பெறப்பட்ட இரண்டு கண்காணிப்புக் கமரா காணொலிகள் உறுதிப்படுத்துகின்றன. இந்தச் சம்பவமானது அளுத்கம பகுதியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

அண்மைக்காலமாக பொலிஸாரின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை அவதானிக்க முடிகிறது. ஊரடங்கு நடைமுறையில் இருந்தபோது மீறியவர்களை பொலிஸார் கொடூரமாகத் தாக்கிய சம்பவங்கள் பலவற்றையும் நாம் அறிகிறோம்.

இவ்வாறு இனம், மதம் என்ற வேறுபாடுகளை அடிப்படையாக வைத்து அநியாயமிழைக்கப்பட்ட , நீதி மறுக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்கள் இருக்கிறார்கள். இனவாத விஷக் கருத்துக்களை விதைக்கும் இவ்வாறானவர்களின் அநாகரிக செயற்பாடுகள் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

அமெரிக்காவில் பொலிஸார் மேற்கொண்ட இனவாத செயற்பாடுகளுக்கெதிராக குரல் கொடுக்கும் நாங்கள், எமது நாட்டில் சிறுபான்மையினருக்கெதிராக நடத்தப்படும் இவ்வாறான மிலேச்சத்தனமான இனவாத செயற்பாடுகளுக்கெதிராகவும் ஒன்றிணைந்து குரல்கொடுக்க முன்வரவேண்டும். மேலும், இவ்வாறான இனவாத செயற்பாடுகள் நாட்டின் சிறந்த எதிர்காலத்தை பாதிக்கும் என்பதனைக் கவனத்திற்கொள்ளவேண்டும். இவ்வாறான அநியாயமிழைக்கப்படுபவர்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கத் தவறினால் நாமும் குற்றவாளிகளாவோம் - என்றார். (ம-150)

# மிருகங்களுக்கு உள்ள சட்டம் சிறுபான்மைக்கு இல்லையா?

## சட்டத்தரணி ஹுனைஸ் பாரூக் கண்டனம்

மன்னார், ஜூன் 6



அளுத்கம, தர்கா நகரில் சிறப்புத்தேவையுடைய சிறுவனான தாரிக் அஹமட் மீது பொலிஸாரால் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான ஹுனைஸ் பாரூக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று சனிக்கிழமை விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

பொதுமக்கள் எவராயினும் ஒரு தவறைச் செய்யும்போது பாதுகாப்பில் இருக்கின்ற அல்லது கடமையில் இருக்கின்ற ஓர் அதிகாரி தாக்கவோ அல்லது வேறு முறையில் தண்டனை வழங்கவோ முடியாது. சட்டத்துக்கு முன் நிறுத்தி சட்டத்தின் ஊடாகவே தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இப்படி சட்டம் இருக்க கடமையில் இருந்த பொலிஸாரால் ஒரு சிறுவன் மீது அதுவும் சிறப்புத்தேவையுடைய சிறுவன் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை ஒரு சிறுபான்மை இனத்தவரின் மீது பாய்ந்த பாய்ச்சலாகவே கருதப்படுகிறது.

கடந்த நாளில் ஒரு நாயை சுட்டுக் கொன்றதற்காக எமது நாட்டில் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் கைதுசெய்யப்பட்டார். இது ஒரு வரவேற்கத்தக்க விடயம்தான். இருப்பினும் இந்த நாட்டில் மிருகங்களுக்கு வழங்கப்படுகின்ற நீதிகூட சிறுபான்மை இனத்தவர்களுக்கு இல்லையா?. இந்தச் சம்பவம் தொடர்பில் உடனடியாக சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதி வழங்கப்படவில்லையென்றால் சட்டத்தரணி என்ற ரீதியில் நான் தாரிக் அஹ்மட்டுக்கு ஆதரவாக முன்னெடுப்புகளை மேற்கொள்ளத் தயாராக உள்ளேன் என்றார். (ம-56-60)

# தாக்கப்பட்ட சிறுவனுக்கு நீதி வழங்கப்படவேண்டும்

## தயாசிறி ஜயசேகர வலியுறுத்து

கொழும்பு, ஜூன 6

அளுத்கம - தர்கா நகர் பகுதியில் பொலிஸாரால் தாக்கப்பட்ட 14 வயதுச் சிறுவனுக்கு நீதி வழங்கப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர வலியுறுத்தியுள்ளார்.

அளுத்கம - தர்கா நகர் பகுதியில் ஊரடங்கின் போது வீதியில் பயணித்தமைக்காக 14 வயதுச் சிறுவன் ஒருவன் பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சில பொலிஸ் அதிகாரிகளின் இவ்வாறான செயற்பாடுகள் கொரோனா வைரஸ் ஒழிப்பில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் அனைத்து பாதுகாப்பு துறையினரின் சேவையையும் கேள்விக்கு உட்படுத்தியுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு நாம் எமது முழுமையான ஆதரவை வழங்குவோம். அத்தோடு பாதிக்கப்பட்ட சிறுவனுக்கு நீதி வழங்கப்படும் என்று நம்புகின்றேன்- என்றார். (ஐ)

# கைவிடப்பட்ட வீட்டுத் திட்டம்; ஜனாதிபதிக்கு மக்கள் கடிதம்

ஹற்றன், ஜூன் 6

நுவரெலியா கந்தப்பளை பார்க் தோட்டத்தில், இந்திய அரசின் உதவியுடன் 20 வீடுகளுக்கான வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் வீடமைப்பு வேலைகள் அனைத்தும் வேகமாக நடைபெற்று வந்த நிலையில் தற்போதைய அரசியல் மாற்றத்தின் பின் முழுவதுமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

நூற்றுக்கு அறுபது வீதமான வேலைகள் முடிக்கப்பட்ட போதிலும், மீதியாக உள்ள வேலைகளை மாத்திரம் பூர்த்திசெய்து தருமாறு கோரி, ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு கந்தப்பளை பார்க் தோட்ட வீட்டுத் திட்ட நிர்வாகக் குழு கடிதம் அனுப்பியுள்ளது.

கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் திகதி வீடமைப்பு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது எனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க)



# சிறுவன் மீது தாக்குதல்; மூவரின் பதவிக்கு வேட்டு

கொழும்பு, ஜூன் 6



அளுத்கம தர்கா நகர், அம்பகஹ சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரணில் கடந்த மே 25ஆம் திகதி கடமையாற்றிய பொலிஸாரால் 14 வயது மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் மோசமாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், கடமை தவறிய குற்றச்சாட்டில் மூன்று பொலிஸார் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

உப பொலிஸ் பரிசோதகர், பொலிஸ் சார்ஜன்ட், பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோரின் பணிகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

களுத்துறை பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ், களுத்துறை பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் களுத்துறை முதலாம் பிரிவு பொலிஸ் அத்தியட்சகரால் முன்னெடுக்கப்பட்ட விசேட மேலதிக விசாரணைகளுக்கமைய இந்தப் பணி இடைநிறுத்த தீர்மானம் எடுக்கப்பட்டு, அவர்கள் மூவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

பணி இடைநிறுத்தம் செய்யப்பட்ட உப பொலிஸ் பரிசோதகரும், சார்ஜன்ட்டும் விசேட கடமைகளுக்காக களுத்துறை பொலிஸ் வித்தியாலயத்திலிருந்து அந்தக் காவலரணுக்கு வரவழைக்கப்பட்டிருந்தவர்கள் எனவும், கான்ஸ்டபிள் அளுத்கம பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸ் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

அதேவேளை, இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகளை முன்னெடுக்க டப்ளியூ.ஏ.சி.ஏ.பி.பீ. எனப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோக தடுப்புப் பணியகத்தின் பொலிஸ் அத்தியட்சகருக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்துள்ளார். (எ-22)

# தாரிக் தாக்குதல் விவகாரத்தில் அதிக பலப் பிரயோகம் இல்லை

## ஆரம்பகட்ட விசாரணைகளில் வெளியாகியுள்ள தகவல்

கொழும்பு, ஜூன் 6

அளுத்கம, தர்கா நகரில் 14 வயது மனநலம் குன்றிய சிறுவன் பொலிஸாரால் தாக்கப்பட்ட விவகாரத்தில் சிறுவன் விடயத்தில் பொலிஸார் கூடுதல் பலப் பிரயோகம் செய்யவில்லை எனவும் தேவையான பலப் பிரயோகத்தையே செய்தனர், அப்போதும் அச்சிறுவன் மனநலம் பாதிக்கப்பட்டவன் என பொலிஸார் அறிந்திருக்கவில்லை என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அளுத்கம தர்கா நகர், அம்பகஹ சந்தி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் காவலரணில் கடந்த மே 25 ஆம் திகதி கடமையாற்றிய பொலிஸாரால் 14 வயது மன நலம் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவன் தாக்கப்படும் காட்சிகள் அடங்கிய பாதுகாப்பு கமராப் பதிவுகள் வலைத்தளங்களில் பரவி, 'ஜஸ்டிஸ் போர் தாரிக்' எனும் 'ஹேஷ் டக்' இன் கீழ் நீதி கோரப்பட்டுவரும் நிலையில், அச்சம்பவம் தொடர்பில் சிறப்பு விசாரணைகளை முன்னெடுக்கும் பொறுப்பு டபிள்யூ.ஏ.சி.ஏ.பி.பீ. எனப்படும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகத்தின் பொலிஸ் அத்தியட்சகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பதில் பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்னவின் உத்தரவில் இந்த விசாரணைகளை கொழும்பு பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் ஆரம்பித்துள்ளது என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் களுத்துறை பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் ஆரம்பகட்ட விசாரணை ஒன்று ஏற்கனவே நடத்தப்பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக சிறப்பு விசாரணைகளை முன்னெடுக்க பதில் பொலிஸ்மா அதிபர் கொழும்பு பெண்கள் மற்றும் சிறுவர்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியக பொலிஸ் அத்தியட்சருக்கு பணித்துள்ளார்.

பொலிஸ் தலைமையகத்தின் தகவல்கள் உத்தியோகபூர்வ தகவல்களின்படி, இந்தச் சம்பவமானது கடந்த மே 25 ஆம் திகதி மாலை 4.45 மணிக்குப் பதிவாகியுள்ளது. தர்கா நகர் பகுதியில் இருந்து வெலிப்பன்னை நோக்கிய பாதையில் முகக் கவசம் இன்றி இளைஞர் ஒருவர் சைக்கிளில் செல்கின்றமையை அம்பகஹ சந்தி பொலிஸ் காவலரணில் இருந்த உத்தியோகத்தர்கள் அவதானித்துள்ளனர்.

பின்னர் அந்த இளைஞர் மீள தர்கா நகர் நோக்கி வரும் போது பொலிஸார் மறித்து அவரை பிடிக்க முற்பட்ட வேளை, சைக்கிள் கட்டுப்பாட்டை மீறி அருகில் இருந்த மீன் விற்பனை இடமொன்றுடன் மோதி விழுந்துள்ளார். அப்போதும் அவர் சிறுவன் என பொலிஸாருக்கு தெரியவில்லை எனவும் இளைஞர் ஒருவரின் தோற்றமே காணப்பட்டதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

அப்போது அவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என பொலிஸாருக்கு தெரியாது எனவும் போதைப்பொருள் பயன்படுத்தும் நபர் என்ற சந்தேகத்திலேயே பொலிஸார் அவரைக் கைதுசெய்ய சற்றுக் கடினமாக நடந்துகொண்டனர் என்று ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்த களுத்துறை பொலிஸ் அத்தியட்சரின் மேற்பார்வையின் கீழான விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்தச் சிறுவன் உயர்ந்த தொனியில் சத்தமிட்டு தப்பிக்க முயன்றதால் பொலிஸார் அவசியமான பலப் பிரயோகம் செய்யவேண்டி ஏற்பட்டதாகவும், பொலிஸார் தமது அதிகாரத்தை அளவுக்கு மேலதிகமாக பயன்படுத்தவில்லை எனவும் ஆரம்பகட்ட விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பின்னர் அங்கிருந்த ஒருவர் குறித்த சிறுவனுக்கு மனநலம் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் அளித்ததை அடுத்து, சிறுவனின் தந்தையை பொலிஸ் நிலையம் அழைத்து சிறுவனை தடுத்து வைக்காமலும் நீதிமன்றில் முற்படுத்தாமலும் தந்தையிடம் கையளிக்கப்பட்டார் என ஆரம்பகட்ட விசாரணை அறிக்கை கூறில் கூறப்பட்டுள்ளது. எனினும் கடமையில் இருந்த பொலிஸார் கடமை தவறினரா என ஆராய களுத்துறை பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் திணைக்களமட்ட விசாரணை ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையிலேயே, சம்பவம் குறித்த விசாரணைகளை முன்னெடுக்க டபிள்யூ, ஏ.சி.ஏ.பி.பீ. எனப்படும் பெண்கள் மற்றும் சிறு வர்கள் துஷ்பிரயோக தடுப்பு பணியகத்தின் பொலிஸ் அத்தியட்சகருக்கு பதில் பொலிஸ்மா அதிபர் பணித்துள்ளார். (எ)

# அடிப்படைவாதத்தால் பிரச்சினைகள் தீரா!

## ரவி கருணாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 6



நாட்டின் அனைத்து விடயங்களுக்கும் அடிப்படைவாதத்திலிருந்து செயற்பட ஆரம்பித்தால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க.

தனியார் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, தேசிய வீரர்கள் தினத்தில் ஆற்றிய உரையின்போது சர்வதேச அழுத்தங்கள் தொடர்ந்தால் சர்வதேச அமைப்புகளிலிருந்து வெளியேற தயங்கப்போவதில்லை என்று கூறியமையை எவ்வாறு பார்கின்றீர்கள் என்று வினவப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டினுள் நடைபெற்ற விடயங்கள் தொடர்பில் அழுத்தங்களை அளித்தால் அவற்றுக்கான தீர்வுகளை காண முயல வேண்டும். அவற்றை ஒளித்து மறைப்பதால் பயனில்லை. நடைபெறாத விடயங்களைக் கூறினால் ஜனாதிபதி கூறும் நிலைப்பாட்டில் இருப்பதில் தவறில்லை.

சர்வதேச நாணய நிதியம், நிதியுதவி அளிக்க வேண்டுமாயின் நிபந்தனைகளை விதித்து அவற்றை முழுமையாக நிறைவேற்ற வேண்டுமென கோரினால் அது தவறாகவே அமையும். அதே நேரம் நாட்டின் முன்னேற்றத்துக்கான நிபந்தனைகளாக இருந்தால் அவற்றை புறக்கணிக்கவும் முடியாது. ஆகவே இந்த இரண்டு நிலைப்பாட்டுக்கும் மத்தியில் தான் தீர்மானங்கள் உள்ளன.

இலங்கையை சர்வதேச குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவதாக கூறப்பட்டபோதும் கடந்த ஐந்து வருடங்களில் எதுவுமே நடைபெற்றிருக்கவில்லை.

சர்வதேசத்துடன் இணைந்தே பயணிக்க வேண்டும். தனித்து செயற்படுவதால் எதனையும் செய்ய முடியாது. போரை நிறைவுக்கு கொண்டுவந்தது போன்று துப்பாக்கி மூலம் அனைத்தையும் நிறைவுக்கு கொண்டுவர முடியும் என்ற அடிப்படைவாதத்திலிருந்து செயற்பட ஆரம்பித்தால் பிரச்சினைகள் தீரப்போவதில்லை- என்றார். (எ)



# பொன்.சிவகுமாரனின் நினைவு நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 6

ஈழத்தின் முதல் தற்கொலையாளர் தியாகி பொன்.சிவகுமாரனின் நினைவு நாள் இன்று யாழ்ப்பாணத்தில் கடைப்பிடிக்கப்பட்டது.

நினைவு தின ஏற்பாட்டு அமைப்பினரின் உறுப்பினர் செந்தூரன் தலைமையில் உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் நினைவுகூரப்பட்டது. யாழ்ப்பாணம், உரும்பிராயில் பொலிஸாரின் சுற்றிவளைப்பில் சயனைட் நஞ்சருந்தி 1974 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ஆம் திகதி உயிரிழந்தார். ஈழப் போராட்ட வரலாற்றில் முதன் முதலில் சயனைட் அருந்தி உயிர் நீத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-20)

# கசிப்பு காய்ச்சிய பெண் சிக்கினார்!

முல்லைத்தீவு, ஜூன் 6

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட 9ஆம் வட்டாரப்பகுதியில் வீட்டுக்காணியில் கசிப்புக் காய்ச்சும் முயற்சியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த பகுதியில் கசிப்பு காய்ச்சப்படுவதாக புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது. இதையடுத்து குறித்த பகுதிக்குச் சென்ற பொலிஸார் கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்தப்படும் 18 லீற்றர் கோடாவுடன் ஆறு பிள்ளைகளின் தாயாரைக் கைதுசெய்துள்ளார்கள்.

கைதுசெய்யப்பட்டவரின் கணவரும் கசிப்புக் காய்ச்சிய குற்றத்துக்காகத் தேடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-20)

# ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் ஆசிரியர்களால் துப்புரவுப் பணி

யாழ்ப்பாணம், ஜூன் 6

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி வளாகம் ஆசிரியர்களால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் செயற்பாடு முன்மாதிரிகையான செயற்பாடு என்று பலராலும் பாராட்டப்படுகின்றது.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முகமாக, பாடசாலைகளைத் துாய்மைப்படுத்தும் செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றது.

அந்த வகையில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் மு.செல்வஸ்தானின் வழிகாட்டலில் கல்லூரியின் ஆசிரியர்களால் துப்புரவுப் பணிகள் அண்மையில் முன்னெடுக்கப்பட்டன. (ம-ந)

# இனவாத ரீதியிலேயே செயற்படுகிறது அரசு

## முன்னாள் எம்.பி முஜிபுர் ரஹுமான் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன் 6

அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே இனவாத ரீதியில் செயற்பட்டு வருகிறது. அரசாங்கத்தால் நியமிக்கப்படும் எந்தக் குழு விலும் தமிழரையோ, முஸ்லிம் களையோ அங்கத்தவராக நியமிக்கவில்லை. அவர்களை புறக்கணித்தே வருகின்றது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹுமான் குற்றஞ்சாட்டி யுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் தொல் பொருள் பாதுகாப்பு தொடர் பில் ஜனாதிபதியின் செயலணி தொடர்பாக தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

ஜனாதிபதி கோத்தாபயவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கை கள் மற்றும் அவரது பதவியேற்பு தொடக்கம் இதுவரையான காலப்பகுதியில் அரசாங்கத்தின் செயற்பாடுகள் அவ்வாறே அமைந்துள்ளன. கிழக்கு மாகா ணத்தின் தொல்பொருளியல் பாதுகாப்பு செயலணியில் மாத்திரமல்ல ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட எந்த அணிகளி லுமே தமிழரோ முஸ்லிம்களோ உறுப்பினர்களாக இணைத்துக் கொள்ளப்படவில்லை. இவர்கள் இனபேதத்தை முன்னிலைப்ப டுத்தியே செயற்பட்டு வருகின் றனர்.

கிழக்கு மாகாணத்தில் தமிழரும் முஸ்லிம்களும் செறிவாக வாழ்ந்துவருகின்ற நிலையில் அவர்களுள் ஒருவரையாவது இணைத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதி அதைக் கருத்திற்கொள்ள வில்லை. ஆரம்பத்திலிருந்தே இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் இவர்கள் தொடர்ந்தும் தமிழரையும் முஸ்லிம்களையும் புறக்கணித்தே வருகின்றனர். இது கவலைக் குரிய விடயமாகும். இதனையே நாங்கள் பலதடவை தெரிவித்து வருகின்றோம்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவர் ரவிகரு ணாநாயக்க ஐக்கிய மக்கள் சக்தி அடிப்படை உரிமை மீறல் மனுவினூடாக அரசாங்கத்துக்கு உற்சாகமளித்துள்ளதாகத் தெரி வித்துள்ளார்.

தற்போது அரசாங்கத்தின் பழி வாங்கல் செயற்பாடுகளில் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பி னர்களே உள்வாங்கப்பட்டு வருகின்றனர். ரவி கருணாநாயக் கவுக்குப் பிடியாணை பிறப்பிக் கப்பட்ட போதும் அவர் மறைந்தி ருந்து பின்னர் மேன்முறையீடு செய்து தப்பிக் கொண்டுள்ளார். இதனூடாக யார் அரசாங்கத்துக்கு உற்சாகமளிக்கின்றனர் என்பது உறுதியாகின்றது-என்றார். (ப)

# ஓய்வூதிய சிக்கலுக்கு தீர்வுகாணப் பணிப்பு

## கிழக்கு கல்வி அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 6

கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றிய ஆசிரியர்கள் ஓய்வூதியம் பெறுவதில் ஏற்ப டும் தாமதங்களைப்போக்க நடவடிக்கை எடுக்குமாறு, கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி.முத்து பண்டா பணிப்புரை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர்க ளுக்கு அமைச்சின் கீழான திணைக்களத் தலைவர்கள் கூட்டம் அண்மையில் நடை பெற்றது. இதன்போதே அவர் இந்தப் பணிப்புரையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சிலருக்கு, உரிய காலத்தில் ஓய்வூதியம் வழங்கப்படாமை யால் அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

ஆசிரியர்களது சுயவிவரக் கோவையிலுள்ள குறைபாடுகளே இதற்குக் காரணம். எனவே, அடுத்து வரும் 5 வருடங்களுக்குள் ஓய்வு பெறவுள்ள சகல ஆசிரியர்களினதும் சுயவிவ ரக் கோவைகளை ஒழுங்குபடுத்துமாறு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு பணிப் புரை விடுத்துள்ளேன்- என்றார். (ஐ)

# கையாலாகாத மஹிந்தவை பிரதமராக்க வேண்டுமா?

## மக்களே தீர்மானிக்க வேண்டும் என்கின்றார் இம்தியாஸ்

கொழும்பு, ஜுன் 6



50 ஆண்டு அரசியல் அனு பவம் இருந்தும், மஹிந்த ராஜபக்ஷவால் ஜனாதி பதி மேற்கொள்ளும் தன்னிச்சையான தீர்மா னங்களுக்கு எதிராகச் செயற்பட முடியாதுள் ளது. அவ்வாறான ஒரு வரை மீண்டும் பிரதமராக்குவதா என்பது தொடர் பில் மக்கள் தீர்மானம் எடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தி அமைப் பின் தேசியப் பட்டியல் வேட்பாளர்களின் சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அடிக்கடி வர்த்த மானி அறிவித்தல்களை வெளியிடுகின்றார். இந்த அறிவித்தல்கள் மூலம் தன்னிச்சையான தீர்மானங் களை எடுக்கின்றார். அதனால் பிரதமரின் அதிகாரம் இழிவாக்கப்பட்டுள்ளதுடன், மக்கள் பிரதிநிதிகளின் அதிகாரமும் அகௌரவப்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது இதன்மூலம் நிர்வாக அதிகாரி கள், அரச உத்தியோகத்தர்களைக் குப்பைக்கூடைக் குள் தள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. நாடாளுமன்றம் இவ்வாறு புறக்கணிக்கப்படும்போது பிரதமருக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் இருக்கும் கௌரவம் என்ன? ஜனாதிபதியின் தான்தோன்றித்தனமான தீர்மானங்க ளைப் பார்த்துக்கொண்டு பிரதமர் அமைதிகாப்ப தில் இருந்து என்ன தெளிவாகின்றது. இருக்கும் அதிகாரங்களைக் கூட மக்களுக்காகப் பயன்படுத்த பிரதமர் நினைக்கவில்லை. அல்லது ஜனாதிபதி அவரையும் தனது அதிகாரத்துக்கு அடிபணிய வைத்தி ருக்க வேண்டும் - என்றார். (எ)

# வாக்குச்சீட்டு அச்சிடும் பணி நிறுத்தம் என்பது வதந்தியே!

## மஹிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 6

வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் நடவடிக் கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்று வெளியாகும் தகவல்களில் உண்மையில்லை. எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சுமார் ஆறு மாவட்டங்களுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிட்டு முடிக்க முடியும் என்று தேர்தல் கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:

6 இயந்திரங்களில் 5 இயந்திரங்களின் மூலம் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் நடக் கின்றன. ஒரு இயந்திரத்தில் அச்சிடும்போது, மாவட்டம் ஒன்றின் அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்களின் எண்ணிக் கையில் ஏற்பட்ட முரண்நிலையால், அதைப் பரிசீலிப்பதற்காக அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டன. எனினும் அது வும் தற்போது அச்சிடுவதற்காகத் தயாரிப் படுத்தப்படுகின்றது. அரச அச்சகமா அதிபரின் கருத்துக்கு அமைய, ஞாயிற்றுக் கிழமை முற்பகல் குறைந்தது 6 மாவட் டங்களுக்கான வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் நிறைவடையும். வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்படவில்லை- என்றார்.(எ)

# டெங்கு பரவும் சூழல் 12 பேருக்கு வழக்கு

உடுவில், ஜுன் 6

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவு ஏழாலையில் டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்த 12 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

உடுவில் சுகாதாரப் பிரிவினரினால் மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஏழாலை, புன்னா லைக்கட்டுவன் ஆகிய இருபிரிவுகளி லும் தலா இருவருக்கும், உடுவிலில் ஒருவருமாக 5 பேர் டெங்குத் தொற் றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோத னைகளின் போது, ஏழாலை கிழக்கு பிரிவில் நுளம்புகள் பரவக்கூடிய சூழலை வைத்திருந்த 12 பேர் இனம் காணப்பட் டனர். இவர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப் பட்டது.


ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபாவும், ஏனைய 11 பேர் மன்றுக்குச் சமுகமளிக்காத காரணத்தால் வழக்குகள் பிற்போ டப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சு-39)

# வீடு அமைப்பதற்கு மரங்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 6

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் கைதடி பகுதியில் வாழ்ந்து வரும் பொருளா தார நிலையில் பின்தங்கிய குடும்பம் ஒன்றுக்கு வீடு அமைப்பதற்கு வேண்டிய மரங்கள் சார்ந்த மூலப்பொருள்கள் அண் மையில் வழங்கப்பட்டன.

புலம்பெயர் நாடொன்றில் வதியும் அந்தோ னிப்பிள்ளை றொபின்சன் அமலதாஸ் என்பவரின் நிதியில் இருந்து கொள்வனவு செய்தே மேற்படி பொருள்கள் வழங்கப்பட் டுள்ளன. (ம-9)



# பாலைவன வெட்டுக்கிளி இலங்கையில் இல்லை!

## விவசாயிகள் அச்சப்படத் தேவையில்லை

யாழ்ப்பாணம், ஜூன் 6

இலங்கையில் நடமாடுபவை மஞ்சள் புள்ளிகள் கொண்ட ஒருவகை வெட்டுக்கிளி என அறிவிக்கப்பட்டுள்ளது. இவை வழமையாக இலங்கையில் உள்ள ஒரு வகை வெட்டுக்கிளி இனமாகும். இவை பாலைவன வெட்டுக்கிளிகள் அல்ல. எனவே வடக்கு மாகாண விவசாயிகள் அச்சமடையத் தேவையில்லை.

இவ்வாறு வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பாலைவன வெட்டுக்கிளிகள் கூடியளவு சேதத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு வெட்டுகிளி இனமாகும். அண்மையில் குருநாகல் மாவட்டத்தில் மாவத்தகமவில் வெட்டுக்கிளிகள் அடையாளம் காணப்பட்டன. இவை மத்திய விவசாயத் திணைக்களத்தினூடாகப் பரிசோதிக்கப்பட்டன. இவை மஞ்சள் புள்ளிகள் கொண்ட ஒருவகை வெட்டுக்கிளிகள் என அறிவிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்பட்ட வெட்டுக்கிளிகளால் வடக்கு மாகாண விவசாயிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. எனினும் அதனை கட்டுப்படுத்தக்கூடிய வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

குருநாகல் மாவட்டத்தில் இனங்காணப்பட்ட வெட்டுக்கிளிகள் கட்டுப்படுத்தக்கூடிய நிலையிலேயே உள்ளன. பாலைவன வெட்டுக்கிளிகள் இலங்கைக்குள் நுழைந்தால், அவற்றைக் கட்டுப்படுத்தக்கூடிய வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

பாலைவன வெட்டுக்கிளிகள் வடக்கு மாகாணத்தில் இதுவரை இனங்காணப்படவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் குப்பிளான் பகுதியில் ஒரு ஆலயத்துக்குப் பின்னால் உள்ள ஒரு செடியில் பத்து பதினைந்து வெட்டுக்கிளிகள் இனங்காணப்பட்டன. இந்த விடயம் தொடர்பில் அங்குள்ளவர்கள் உடனடியாக விவசாய திணைக்களத்துக்கு தெரியப்படுத்தியமையை அடுத்து அங்கு சென்று பார்வையிட்டோம். அவை இலங்கையில் உள்ள ஒரு வகை வெட்டுக்கிளிகள்.

கிளிநொச்சி மாவட்டத்திலும் இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றது. விவசாயிகள் எமக்குத் தெரியப்படுத்தினர். வவுனியா மாவட்டத்திலும் இனங்காணப்பட்டன. எனவே அவை அனைத்தும் இலங்கையில் உள்ள சாதாரண வெட்டுக்கிளிகள். விவசாயிகள் வெட்டுக்கிளிகளை அடையாளம் கண்டால் தகவல்களை விவசாய திணைக்களத்தினருக்கு தெரியப்படுத்தினால் மட்டுமே, எமது விவசாய போதனா ஆசிரியர்கள் ஊடாக அவற்றை ஆராய முடியும்.

விவசாயிகளின் ஒத்துழைப்பு இந்த விடயத்தில் எமக்கு அவசியமானது. வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களின் பிரதி விவசாயப் பணிப்பாளர்களின் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களை நாங்கள் விவசாயிகளுக்கு வழங்கியுள்ளோம். அதேபோல் மத்திய விவசாயத் திணைக்களத்தின் 1920 என்ற தொலைபேசி இலக்கத்தையும் விவசாயிகளுக்கு அறிவித்துள்ளோம். எனவே விவசாயிகள் தாங்கள் சந்தேகப்படுமிடத்து தகவலைத் தெரியப்படுத்தினால் அவை தொடர்பில் நாங்கள் ஆராய்ந்து அதனைக் கட்டுப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்போம்.

பாலைவன வெட்டுக்கிளிகள் தொடர்பில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் முகமாக விளம்பரப் பதாகைகள் அச்சிடும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. அவை முடிவுற்ற பின்னர் பொதுமக்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகளை விவசாயத் திணைக்களம் முன்னெடுக்கும்- என்றார்.(க-111)

# நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை எமக்கே

## அபேகுணவர்தன தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 6

நாட்டில் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை, நிச்சயம் எமக்குக் கிடைக்குமென முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தலில் பங்கேற்பதற்கு மக்கள் அச்சுறுகின்றனர். இதேவேளை எதிர்க்கட்சி பெரும் நெருக்கடியைத் தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது. நாட்டில் கொரோனா அச்சுறுத்தல் காணப்படுகின்ற போதிலும் பொதுத்தேர்தலுக்கு அனைத்துக் கட்சிகளும் தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப)

# காதலியை காப்பாற்ற உயிர்விட்ட காதலன்!

கொழும்பு, ஜூன் 6

கடல் நீரில் அடித்துக் சென்ற காதலியை காப்பாற்ற முயற்சித்த காதலன் நீரில் மூழ்கி உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கொழும்பு புறநகர் பகுதியான மொரட்டுவ பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

எகொட உயன பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார். இந்தக் காதல் ஜோடி தங்கள் உறவினர் ஒருவருடன் கடற்கரைக்கு சென்றுள்ளனர். இதன்போது திடீரென பாரிய கடல் அலை ஒன்றில் காதலி சிக்கியுள்ளார். இதனையடுத்து காதலியை காப்பற்ற இளைஞன் நடவடிக்கை எடுத்துள்ளார். எனினும் காதலியை காப்பாற்றிவிட்டு அவர் கடல் அலையில் சிக்கி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

காதலியான 18 வயதுடைய பெண் பாணந்துறை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஐ-ரி2)

# குளவிகள் கொட்டியதில் 11 பேர் பாதிப்பு

மஸ்கெலியா, ஜூன் 6

குளவிக்கொட்டுக்கு இலக்காகி கர்ப்பிணிப் பெண் உட்பட 11 தோட்டத் தொழிலாளர்கள் மஸ்கெலியா மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒல்டன் தோட்ட கிங்கோரா பிரிவில் இன்று இடம்பெற்றது. இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக கிளங்கன் ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர். (ஐ-ரி2)

# தோட்டத் தொழிலாளர்களை காவு வாங்கும் குளவிகள்

## கட்டுப்படுத்தக் கோரிக்கை

அம்பாறை, ஜூன் 6

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்காக வரலாற்று ரீதியாக முக்கிய பங்குவகிக்கும் தோட்டத்தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகி அவதியுறும் அனர்த்த நிலைமை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த அவல நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் காத்திரமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத் தலைவரும், தொழிற்சங்கவாதியுமான எஸ்.லோகநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பாம்புக்கடி, அட்டைக்கடி வேதனைகளுக்கு மத்தியிலும் தேயிலைக் கொழுந்து பறிக்கும் மற்றும் தோட்டத் தொழிலாளர்கள் குளவிக் கொட்டுக்கு இலக்காகும் பரிதாப நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குளவிக்கொட்டு உயிராபத்தை ஏற்படுத்துகின்றபோதிலும், இதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

தோட்டத்தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கான காத்திரமான நடவடிக்கைகளை அரசும், தோட்டக் கம்பனிகளும் தாமதமின்றி எடுக்க வேண்டும். அவர்களது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

குளவிக்கொட்டுக்கு இலக்காகும் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளம் வழங்கல் போன்ற கண்துடைப்பான செயற்பாடுகளின்றி கணிசமான நஷ்ட ஈடு, இழப்பீடுகள் வழங்கப்பட ஆவன செய்யப்பட வேண்டும்- என்றுள்ளது. (க-30)

# உராய்வு நீக்கி எண்ணெய் உற்பத்தி இலங்கையில் ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 6

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முதல் முறையாக உராய்வு நீக்கி எண்ணெய் உற்பத்தியில் ஈடுபடவுள்ளது என்று பெற்றோலிய வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குள் உராய்வு நீக்கி எண்ணெய் நுகர்வு வருடாந்தம் 65 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமாக காணப்படுகிறது. எனினும் உராய்வு நீக்கி எண்ணெய் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களிலும் உராய்வு நீக்கி எண்ணெய்யை இலங்கைக்குள் உற்பத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் அது பல்வேறு காரணங்களால் தடைப்பட்டன. தற்போது அதை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. புதிய இயந்திரத்தின் மூலம் வருடம் ஒன்றுக்கு 33 ஆயிரம் லீற்றர் உராய்வு நீக்கி எண்ணெய்யை உற்பத்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் மாத்திரம் 65 ஆயிரம் லீற்றர் உராய்வு நீக்கி எண்ணெய்யை இறக்குமதி செய்வதற்கு மாத்திரம் 3 ஆயிரம் கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. - என்றார். (ஐ)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 06.06.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.